பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 19 சனிக்கிழமை 01.02.2025 கதிர் 085

## இனி இது ரகசியம் அல்ல!

மட்டக்களப்பில் அந்த மாவட்டத்தின் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மாவட்ட இணைப்பாளர்கள் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடந்தது. ☞ 2

# நீதி, சமத்துவத்தை நிலைநாட்ட பாடுபடும் தலைமுறைக்கு மாவை ஓர் ஆசீர்வாதம்

## பிரதமர் ஹரினி இரங்கல் செய்தி

நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட பாடுபடும் எதிர்கால தலைமுறையினருக்கு மாவை சேனாதிராசா பற்றிய நினைவுகள் ஆசீர்வாதமாக அமைய பிரார்த்திக்கிறேன் என பிரதமர் ஹரிணி மாவை சேனாதிராசாவின் மறைவுக்கான தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.





அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மக்கள் சேவைக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த சிரேஷ்ட அரசியல் தலைவரான கௌரவ மாவை சேனாதிராசாவின் மறைவை அறிந்து நான் மிகவும் வருத்தமடைகிறேன். தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அவரது அர்ப்பணிப்பும் ஈடுபாடும் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். ☞ 2

# 17 இந்திய மீனவர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் கடந்த டிசம்பர் 24 செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

அதனையடுத்து, தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதல் கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக விசாரணை ☞ 2

## அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் வேறு சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் தொடர்பான தகவல்களை பொலிஸாருக்கு அறிவிக்க பொலிஸ் தலைமையகத்தினால் அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தியுள்ளது.

பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள் குற்றவாளிகளுக்கும் சட்டவிரோத செயல்களைச் செய்பவர்களுக்கும் கிடைப்பதாக மக்களுக்கு சந்தேகம் ☞ 2

## 3,000 இலங்கையர்களையும் அமெரிக்கா திருப்பி அனுப்பும்

புதிய அமெரிக்க நிர்வாகத்தால் நாடு கடத்தப்பட திட்டமிடப்பட்டுள்ள சட்டவிரோத வெளிநாட்டினரில் 3,065 இலங்கையர்களும் அடங்குவதாக அந்நாட்டு குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கத் துறை தெரிவித்துள்ளது.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த 1,445,549 பேர் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியிருப்பதாக பட்டியல் ஒன்றை அவர்கள் தயாரித்துள்ளனர். ☞ 2

## வடக்கில் விசேட கவனம் செலுத்தி

# கிராமப்புற பொருளாதாரத்தை விருத்தி செய்வதே நோக்கம்

## ஜனாதிபதி நேற்றுத் தெரிவிப்பு

**வடக்கு, கிழக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்டுள்ளது, அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது. ஆகவே, விசேட கவனம் செலுத்தி பொருளாதார ரீதியில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம் என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.**



**யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த ஜனாதிபதி, யாழ். மாவட்ட** ☞ 2

# ஐதேக – ஐமச இணைப்புக் குறித்து காலம் தாழ்த்தாது பேசவேண்டும்

## மல்வத்த பீடாதிபதி வலியுறுத்து

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவதற்கான காலம் கடந்துள்ள போதிலும் இனியும் காலம் தாழ்த்தாது பேச்சு நடத்துவதுதான் சிறந்தது என மல்வத்து விகாரையின் வண. மகாநாயக்கர் திப்பட்டுவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமன்றி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உட்பட பல கட்சிகளும் தற்போது இரண்டு மூன்று கட்சிகளாகப் பிளவுபட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார். தற்போது கட்சி பிளவுகள் ஏற்படுவது வழமையாக மாறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள வியாழக்கிழமை மல்வத்து மகாவிகாரைக்குச் ☞ 7

# யாழ். மாவட்டத்தில் இனி கடவுச்சீட்டு அலுவலகம்

## அனுமதி வழங்கினார் ஜனாதிபதி

யாழ். மாவட்ட கடவுச்சீட்டு அலுவலகத்தினை திறக்க உத்தியோகபூர்வ அனுமதியினை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வழங்கினார்.

இரண்டு வாரமாக நாடளாவிய ரீதியாக தடைப்பட்ட கடவுச்சீட்டு வழங்கலினைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார் ஜனாதிபதி.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

கடவுச்சீட்டு அலுவலகத்தினை யாழ். மாவட்ட செயலகத்தில் திறப்பதற்கு வழிவகைகள் எதுவும் இருக்கிறதா என மாவட்டப் பதில் செயலாளர் பிரதீபனிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார். பதில் வழங்கிய பிரதீபன், எமது மாவட்ட செயலகத்தில் இடப்பற்றாக்குறை இருக்கிறது. இருப்பினும் வடக்கு மக்களுக்குத் தேவையான ஒன்றாக கடவுச்சீட்டு அலுவலகம் காணப்படுவதால் அதற்கான இடத்தை ஒதுக்குவது குறித்து ஆலோசிக்கலாம் என என்றார்.

இந்தக் கூட்டத்தில் ☞ 7

## நம்பிக்கை இழந்து போவதால்

# பொலிஸ் நிலையங்களை மூடும்படி கிளி, வவுனியா மக்கள் வலியுறுத்து

## யாழ்ப்பாணக் கூட்டத்தில் அமைச்சர் பிமல் தெரிவிப்பு

கிளிநொச்சி – இராமநாதபுரம், வவுனியா ஈச்சங்குளம் பகுதி பொலிஸாரின் செயற்பாடுகளால் பொலிஸ் நிலையங்களை மூடுமாறு மக்கள் விரக்தியில் தன்னிடம் தெரிவித்ததாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத வியாபாரங்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை ☞ 7

# இனவாதிகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக பாயும்

## வல்வெட்டித்துறையில் ஜனாதிபதி உரை

தெற்கில் இனவாதத்தை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கின்றனர். ஆனால், நாம் இந்த நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிக்க ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இனவாதிகளுக்கு எதிராக கடுமையாக சட்டத்தை அமுல்படுத்துவோம். நாட்டின் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப எமது ஆளும் தரப்பு முழு மூச்சாக செயற்படுகிறது என ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க ☞ 7

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

ரெலோவின் தலைமைக் குழு உறுப்பினர், கட்சியின் தேசிய அமைப்பாளர் இந்திரகுமார் பிரசன்னாவின் தலைமையில் இந்தக் கூட்டம் நடந்தது.

ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியின் கடந்த காலச் செயற்பாடுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக கூட்டணிக்குள் இருக்கும் கட்சிகளின் பின் கதவு அரசியல் குறித்து காரசாரமான வாக்குவாதங்கள் நிகழ்ந்துள்ளன. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில்தேன்னிலவுகொண்டாடிக்கொண்டு அரியநேந்திரனையும் ஆதரிப்பதாக நாடகம் ஆடியது குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. படம் காட்டும் புலம்பெயர் தமிழ் பெரு நிறுவனத்தில் இருந்து பல கோடி ரூபாய் பெறப்பட்டு தமது 'பொக்கட்டுக்குள்' போட்டுக்கொண்டவர்கள் குறித்தும் காரசாரமாக கருத்துக்கள் பறந்துள்ளன.

கடைசியில் இந்த மாதிரியான ஒரு கூட்டணியில்நான் இனியும் இருக்கமாட்டேன் என்று பிரசன்னா தனது பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பிரதம அமைப்பாளர் என்ற பதவி நிலையில் இருந்து தான் வெளியேறுகிறார் என்றும் இனிஒருபோதும் இந்தக் கூட்டணியின் கீழ் தேர்தல் கேட்கமாட்டார் என்றும் இந்தக் கூட்டணியில் சிலரின் செயற்பாடுகள் எனக்கு அறவே பிடிக்கவில்லை அதனால் இனி இந்தக் கூட்டணியின் பெயரில் நான் செயற்படவும் மாட்டேன் என்று கோபத்தோடு பொரிந்து தள்ளிவிட்டுச் சென்றுவிட்டாராம் அவர்.

அவருக்கு அவரது கட்சியினர் மேல்தான் கோபம். அவர்கள்தான் அவர் கூறிய எல்லாக் குற்றங்களையும் செய்தவர்கள். அதை அவர் தன்னுடைய கட்சியில்தான் போய்க் கேட்கவேண்டும் என்று அவரின் பின்னால் சிரிக்கிறார்கள் மற்றக் கட்சியினர். எப்படியிருந்தாலும் கிழக்கில் ஏற்கனவே படுபலவீனமாக இருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு பிரசன்னாவின் விலகல் ஒரு பெரும் பின்னடைவுதான். அவர் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும் இருந்தவர். மக்கள் செல்வாக்குள்ளவர். அடுத்தடுத்து உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் என்பன நடக்கவுள்ள நிலையில் அவரது வெளியேற்றம் கூட்டணியை மட்டக்களப்பில் மேலும் அதள பாதாளத்திற்குள் தள்ளும்.

...............................

நான் நேற்றே கூறியதைப் போன்று தலைவர் மாவை சேனாதிராசாவின் இறுதிச் சடங்குகளைத் தமது அற்பச அரசியல் ஆசைகளுக்காகப் பயன்படுத்திக்கொள்ள நினைக்கும் தமிழ் அரசுக் கட்சியை வீழ்த்தக் கங்கணம்கட்டிக்கொண்டுள்ள தரப்புக்கள் சில, செத்தவீட்டில் நேற்று தமது கைங்கரியத்தைக் காட்ட முற்பட்டிருக்கின்றன. இருப்பினும் அது பெரியளவில் வெற்றிபெறவில்லை என்றே தெரிகின்றது. அதனால் இறுதிக் கிரியைகளின்போது எப்படியாவது ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி விடுவது என்பதில் இந்தத் தரப்புக்கள் மும்முரமாக இருக்கின்றன என்று கேள்வி.

தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் நேற்று தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தச் சென்றபோது அவரை உள்ளே செல்ல அனுமதிக்கமாட்டோம் என்று சிலர் தடுத்து தமது அரசியல் கீழ்த்தர உணர்வுகளைவெளிப்படுத்தப்பார்த்துள்ளனர். ஆனால், அவர்களைப் பொருட்படுத்தாமல் வேகமாகத் தள்ளிவிட்டுவிட்டு அவர் உள்ளே சென்றுவிட்டார். தலைவர் மாவைக்கு அஞ்சலி செலுத்திவிட்டு அவரது மகனுடனும் இறுதிக் கிரியைகள் ஏற்பாடுகள் பற்றிப் பேசி விட்டு அமைதியாகத் திரும்பியுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்ட பின்னர், அவர் பதவியேற்பதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இருவழக்குகளில் ஒன்றை பீற்றர் இளஞ்செழியனே தாக்கல் செய்திருந்தார். யாழ்ப்பாணத்தில் அவரது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருகோணமலையில் நடந்த பொதுக் குழுக் கூ-ட்ட முடிவுகள் அப்படியே நடைமுறைப்படுத்தப்படவில்லை எனில் தான் வழக்குத் தாக்கல் செய்வார் என்று அந்தக்கூட்டத்திலேயே அறிவித்துவிட்டுத்தான் அவர் அதனைச் செய்திருந்தார். அவரது வழக்கில் கட்சிக்கு எதிரான இடைக்காலத் தடையோ சிறீதரனுக்கு எதிரான தடைகளோ வழங்கப்படவில்லை. திருகோணமலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில்தான் சீறிதரன் தலைவராகப் பதவியேற்பதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில்தான்பீற்றர்இளஞ்செழியன் மாவையின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்பதைத்தடுப்பதற்குப்பார்த்துள்ளார்கள். அவருடன் சேர்த்து மேலும் 13 பேரையும் இறுதிக்கிரியைகளில்பங்கேற்கவிடாமாட்டோம் என்றும் அந்தப் 14 பேரினது படங்களுடன் எதிர்ப்புத் துண்டறிக்கைகளை மாவையரின் இறுதிஊர்வலத்தில்கொடுத்துபரிசுகெடுப்போம் என்றும் கறுவிக்கொண்டு திரிகின்றனராம் சிலர். ஏதோ ஒரு விதத்தில் மாவையரின் இறுதிக் கிரியைகளைக் குழப்பி அவரின் புகழுக்குகடைசிவரையில்கேடுவிளைவித்து, அந்த மனிதரை இறுதி மேடையில்கூட நிம்மதியாகத் தூங்கவிடக்கூடாது என்பதில் இந்தக் குழு குறியாக இருக்கின்றது என்பது மட்டும் தெளிவு. வாழ்க அவர்களின் அசிங்க அரசியல்!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# வடக்கு மாகாணத்தில் உள்ள
# வீதிகளைத் திருத்த எவ்வளவு நிதி தேவை என அறியா அதிகாரிகள்

வடக்கு மாகாணத்தின் வீதிகளை திருத்துவதற்கு எவ்வளவு நிதி தேவை என அரச அதிகாரிகளை ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கேட்க, அதற்கு பதில் கூற முடியாமல் அரச அதிகாரிகள் திக்கு முக்காடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டத்தில்கலந்துகொண்டுமாவட்டத்தின் அபிவிருத்தி பற்றி அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது வடக்கு மாகாணத்தின் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள கிராமங்களின் வீதிகளை புனரமைத்து, சீரமைக்க எவ்வளவு நிதி தேவை, எவ்வளவு நிதி கொடுத்தால் அனைத்து வீதிகளையும் புனரமைக்க முடியும் என கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், இந்த ஆண்டில் எத்தனை வீதிகளை புனரமைக்க முடியும் என்றும் கேட்டுள்ளார். இதற்கு வீதி அபிவிருத்தி தொடர்பில் எந்த அதிகாரிகளும் முழுமையான பதில் வழங்கவில்லை. 'அது என்னுடைய திணைக்களம் அல்ல', 'அது மாகாணத்துக்குரியது' 'மற்றையது மத்திக்குரியது' என்பது போல் மாறிமாறி பதில்களை வழங்கியுள்ளனர்.

## கிராமப்புற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தி தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடிய பின்னர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் காணிகள் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. காணிகள் பாதுகாப்புத் தேவைக்காகவும் அபிவிருத்திக்காகவும் கையகப்படுத்தப்பட்டுள்ளதென கூறப்படுகிறது. ஆனால், எமது கொள்கையிலே மக்களின் காணிகள் மக்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பதைக்கூறியுள்ளோம். எனவே, மக்களின் காணி எத்தகைய அபிவிருத்திக்கானது என்பதை பார்த்து பயனுள்ளது என்றால்தான் அதனை கையகப்படுத்த முடியும். அவ்வாறு கையகப்படுத்த முடியுமென்றால் மக்களின் ஒத்துழைப்புடன் அதற்கான இழப்பீட்டை கொடுத்து, அதனைச் செயற்படுத்தவேண்டும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக முப்படையிடம் காணிகள் உள்ளதென்றால் பாதுகாப்பு தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு மக்களுக்குவழங்குவதற்குநடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். இதேவேளை வலிகாமம் வடக்கு கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகையை நாம் பயன்படுத்தப் போவதில்லை. அதனைமக்களுக்குபயனுள்ள வகையில் பயன்படுத்தவேண்டும். அதற்கான திட்டத்தை தயாரித்து எமக்கு அனுப்புங்கள். மக்களுக்கு பயனுள்ளதாகவே அத்திட்டம் இருக்க வேண்டும்.

ஜனாதிபதி மாளிகையைப் பல்கலைக் கழகத்துக்கோ, சுற்றுலாத்துறைக்கோ வேறு திட்டங்களுக்கோ வழங்குவதென்றால் அதற்கான முறையான திட்டங்களை வகுப்பதோடுஅவைமக்களுக்குபயனுள்ளதாக அமைய வேண்டும்.

அரச நிர்வாகத்தில் 30 ஆயிரம் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. ஆனால், இந்த வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப முடியாது. வேலைவாய்ப்பு இல்லாமல் பட்டதாரிகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களை இந்த இடத்திற்கு உடனடியாக நிரப்பிவிடமுடியாது. வெற்றிடங்களின் தகுதிக்கு ஏற்ப நடைமுறைகளைப் பின்பற்றியே அவை நிரப்பப்படவேண்டும். அரசஉத்தியோகத்தர்கள் ஆரம்பப்படிநிலையில்வெற்றிடங்கள்இல்லை. அதற்கு அடுத்த கட்டங்களுக்கே வெற்றிடங்கள் உள்ளன. ஏற்கனவே, அரச உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்கின்ற நடைமுறைகளைப் பின்பற்றி அடுத்த நகர்த்தலை செய்ய வேண்டும். அதன்போது உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இதேபோல் பொலிஸ் திணைக்களத்துக்கு ஆளணி தேவையாக உள்ளது. சுமார் 21 ஆயிரத்துக்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டும். இதனையும்உடனடியாக நிரப்பிவிடமுடியாது. பொலிஸ்திணைக்களத்தில் மொழிபெயர்ப்புக்கும் ஆளணி தேவையாக உள்ளது. இதனைநிவர்த்திசெய்தாலேபொலிஸ் நிலையங்களில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால், மொழிபெயர்ப்புக்கு ஏற்ற ஆளணி தற்போது இல்லை. பொலிஸ் சேவைக்கு தமிழ் இளைஞர்கள், பெண்கள் இணைவதில்லை. அவர்கள் இணைந்துகொண்டாலே முறையான பயிற்சிகள் வழங்கி அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஆளும்தரப்பின் செயற்பாடுகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கடற்தொழிலாளர் பிரச்சினை நீண்டகாலமாக உள்ளது. அதனை இராஜதந்திரமாக அணுக வேண்டியுள்ளது. படிப்படியாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். இதற்காக உயரிய பங்களிப்பை செய்வேன்.

இந்த நாட்டில் அரசியல் மாற்றம்தான் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரம் பின்னடை வில்தான் உள்ளது. அபிவிருத்திகள் பின்ன டைவில்தான் உள்ளன. பொருளாதாரத்தில் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளோம். ஆனால் அது போதிய முன்னேற்றமாக இல்லை.

மாற்றங்களை மக்கள் காணவேண்டும். கடந்தகாலங்களில்பல்வேறுபட்ட ஊழல்களும் கொள்ளையடிப்புகளும் அபிவிருத்தி என்றும் அரைகுறைவேலைகளே இடம்பெற்றுள்ளன. இதனை மாற்றியமைக்க வேண்டும். மக்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். கிராமங்கள் முன்னேற்றமடைய வேண்டும். இதில் தான் எமது மாற்றங்களை காண முடியும்.

கடந்தகாலங்களில் தென்னிலங்கை அரசு அல்லது தெற்கு அரசுகள் வடக்கு அரசுகளை அல்லது வடக்கு, கிழக்கை சமனாகப் பார்ப்பதில்லை; அபிவிருத்தி செய்வதில்லை என்றுகூறுவதுண்டு. ஆனால், எமதுகாலத்தில் அவ்வாறு இருக்க முடியாது. இந்த நாடு முழுவதுமே அபிவிருத்தி செய்யப்படும்போது வேறுபாடு காட்டாமல் கிராமங்கள் தோறும் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

கிராமங்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய கல்வி முக்கியமானது. நவீன தொழில்நுட்பங்கள் கொண்டுவரப்பட்டு முன்னேற்றமடையச் செய்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணம் போரால் பாதிக்கப்பட்டுள்ளது, அபிவிருத்தியில் பின்தங்கியுள்ளது. ஆகவே, விசேட கவனம் செலுத்தி பொருளாதார ரீதியில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கமாகும். அரச அதிகாரிகள் முழுமையாக வேலை செய்யவேண்டும். அதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

## நீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்ஒருமுக்கியஆளுமையாகவும் திகழ்ந்த கௌரவ சேனாதிராசா இன ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்காக பாடுபட்ட அதேவேளையில், தனது மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக ஒரு முன்னணிப் பங்கை வகித்தார்.

ஜனநாயக நடவடிக்கைகளுக்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் அமைதியான அரசியல் இயக்கத்தின் மீது அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கை ஆகியவை நாடாளுமன்றத்தில் அவரது பல தசாப்த கால சேவைக் காலத்தில் சிறப்பாக பிரதிபலித்தது.

அவரது மறைவு அவரை அறிந்த மற்றும் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவரது மறைவினால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதி மற்றும் சமத்துவத்தை நிலைநாட்ட பாடுபடும் எதிர்காலதலைமுறையினருக்கு அவர் பற்றிய நினைவுகள் ஆசீர்வாதமாக அமைய என பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதால் இந்த தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தகவல் அளிப்பவர் தங்கள் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் பொலிஸாருக்குதகவல்களைவழங்குவதற்காக, பொலிஸ் தலைமையகம் 1997 என்ற அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

## 3,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவிலிருந்து வெளியேற்றப்ப டுவதற்கான இறுதிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள வெளிநாட்டினரின் எண்ணிக்கையும் இதில் அடங்குவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆளும்தரப்பின் இந்த நடவடிக்கையை ஆதரிக்காத நாடுகளின் பட்டியலும் இணைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் இலங்கை சேர்க்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

## 17 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அதனை தொடர்ந்து, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணையின் பின்னர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் 17 பேரையும் முற்படுத்தியபோது தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், இந்த மீனவர்களின் வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான், மீனவர்களை விளக்கமறியலில்வைக்குமாறுஉத்தரவிட்டார்.

அதன்படி, 17 இந்திய மீனவர்களையும் பெப்ரவரி 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத இழுவை மடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது, அவர்களை, அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் இரண்டு ரோலர் படகுகளோடு கைது செய்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழ் இனத்தின் அரசியல் விடிவிற்காக இறுதிவரை போராடிய போராளி மாவை

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் புகழஞ்சலி

சுதந்திரத்திற்கு பின்னரான இலங்கையின் வரலாற்றில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக இறுதி வரை போராடிய ஒரு உன்னதமான போராளி அமரர் மாவை சேனாதிராஜா என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவரும், மூத்த அரசியல்வாதியும், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜாவின் மறைவையொட்டி கட்சியின் பொதுச்செயலாளரால் வெளியிடப்பட்டுள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

மாவை அண்ணர் என்று அனைவராலும் வயது வித்தியாசமின்றி அன்பாக அழைக்கப்பட்டவர் மாவை சோ.சேனாதிராஜா. யாழ்ப்பாண மண்ணின் புகழ்பூத்த மாவிட்டபுரத்தில் பிறந்த சோ.சேனாதிராஜா அவர்கள் ஊரின் பெயருக்கு பெருமை சேர்த்தவராக மாவை சேனாதிராஜா என்று அனைவராலும் அழைக்கப்பட்டார். 1961 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் அரசியல் அடக்கு முறைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வா அவர்களின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தனது 19 ஆவது வயதிலேயே இணைந்து போராடியதோடு அன்னாரது அரசியல் பயணம் ஆரம்பமாகியது. இறுதி மூச்சுவரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக ஜனநாயக ரீதியில் போராடியவர் மாவை சேனாதிராஜா.

1962 ஆம் ஆண்டு இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியின் இளைஞர் அணியில் சேர்ந்து முழுநேர அரசியல் பயணத்தை ஆரம்பித்த மாவை சேனாதிராஜா அவர்கள் 1966 முதல் 1969 வரையில் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்தில் செயலாளராகவும், 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும் துடிப்புடன் செயற்பட்டவர். 1989 இல் முதன்முறையாக நாடாளுமன்ற அரசியல் பிரவேசத்தை ஆரம்பித்து 2020 வரையில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் ஜனநாயக வழியில் குரல் கொடுத்தவர். தனது அரசியல் பயணத்தில் பலதடவை சிறைவாசம் சென்றதுடன் தேர்தல் காலங்களில் அரசியல் எதிரிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த நிலையிலும் அரசியல் பணிகளை முன்னெடுத்த மாபெரும் தலைவர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் மறைவுக்கு பின்னர் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியில் பல்வேறு பதவிகளை வகித்து



கட்சியை வழி நடத்தியவர். 2004 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையில் கட்சியின் பொதுச்செயலாளராக 10 வருடங்கள் பணியாற்றியதுடன், 2014 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் கட்சியின் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் 2024 ஆம் ஆண்டுவரையில் ஏறத்தாள 10 வருடங்கள் கட்சியின் தலைவராக வழிநடத்தியவர்.

அன்னாரின் இழப்பு இலங்கைத்தமிழ் அரசுக்கட்சிக்கு பாரிய இழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது கலங்கி நின்றவர் மாவை அண்ணன்

## றிஷாத் பதியுதீன் அனுதாபம்



இனங்களுக்கப்பால் மனித நேயமே முதன்மை என்ற அடிப்படையில் தமது அரசியல் நகர்வுகளை முன்னெடுத்த மூத்த அரசியல்வாதியும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமானறிஷாத்பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அமரர் மாவை சேனாதிராஜா அவர்களின் மறைவு தொடர்பில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளதாவது -

யாழ் மாவட்ட மக்களை பிரதி நிதித்துவம் செய்து அவர்களின் பல்வேறு தேவைகள் தொடர்பிலும், அது போன்று அம்மக்களது பாதுகாப்பு தொடர்பிலும் தொடர்ந்தும் குரல் கொடுத்துவந்த ஒரு சிறந்த மனிதராகவும், அரசியல் ரீதியில் குறுகிய சிந்தனைகள் அற்ற பரந்த பார்வையைக் கொண்ட ஒருவராகவும் அமரர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களை அடையாளம் காணுகின்றேன்.

குறிப்பாக வடபுல முஸ்லிம்களின் வெளியேற்றம் அதிலும் யாழ்.மாவட்ட முஸ்லிம்களது வெளியேற்றத்தின் போது கண்ணீர் கலங்கிய ஒருவராகவும், இந்த வெளியேற்றத்தை விரும்பாத ஓர் அரசியல் தலைவராக தனது சகோதர சமூகத்தின் உணர்வுகளிலும் இரண்டறக் கலந்த ஒருவராக அமரர் மாவை சேனாதிராஜா அவர்கள் இருந்துள்ளார்கள்.

இந்த நிலையில் தனது 83 ஆவது வயதில் இயற்கை எய்திய அமரர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்களின் இந்த இழப்பு தமிழ் பேசும் மக்களுக்கும், குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் தீர்மாணங்களிலும் பெரும் இடை வெளியை தோற்றுவிக்கும் என தெரிவித்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாத் பதியுதீன் அவரது இழப்பால் துயர்வுறும் குடும்பத்தினருக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் தனது அழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதாக வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ் அரசுக் கட்சியின் கடைசித்தூண் சரிந்தது

## சுரேஸ் பிரேமச்சந்திரன் இரங்கல்

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் மரணம் அந்தக் கட்சிக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் மறைவிற்கு அஞ்சலி தெரிவித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் முழுவிவரம் வருமாறு -

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையில் சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் தந்தை செல்வநாயகம் அவர்கள் 1950 களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தோற்றுவித்தார். அன்றிலிருந்து தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைக்காக அறவழியில் தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை நடத்தியதில் மாவை சோ. சேனாதிராஜா அவர்களுக்கு ஒரு பாரிய பங்கிருக்கின்றது.

சிறுவனாக - இளைஞனாக - முதிர்ச்சிபெற்ற அரசியல்வாதியாக அவர் தனது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செலவழித்தார் என்பதே உண்மை.

கடந்த பத்து வருடங்களாக தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று தனது கட்சியை தமிழ் மக்களின் விடுதலையின்பால் வழிநடத்தி வந்தார். தமிழ் கட்சிகளை ஓரணியில் திரட்ட அவர் விரும்பியிருந்தாலும்கூட கட்சியின் இன்றைய நிர்வாகிகள் அதற்குச் சாதகமாக இல்லை என்ற நிலை தொடர்ந்தும் இருந்து வந்தது.

அதன் காரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும்கூட மக்களின் பெரும்பான்மையான வாக்குகளையும் இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

சேனாதிராஜா அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காக ஏழுவருடங்களுக்கும் மேலாக சிங்கள சிறைச்சாலைகளில் சிறைவாசமும் அனுபவித்தார். தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலையை வலியுறுத்தி ஒரு பாரிய ஆயுதப்



போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த அதேவேளையில் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழ் மக்களுக்கு உரித்துடைய காத்திரமான ஒரு தீர்விற்காக தொடர்ச்சியாகக் குரல்கொடுத்து வந்தவர்.

தமிழரசுக் கட்சியின் நீண்ட பயணத்தின் இறுதியானவராக சேனாதிராஜா அவர்களே விளங்குகின்றார்.

நீண்ட பாரம்பரியமிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனுபவமிக்க தலைவர்களில் மாவை சேனாதிராஜா அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருந்தார். அவரது மறைவிற்குப் பின் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல மக்கள் நலன்சார்ந்து காத்திரமான பங்களிப்பொன்றை செய்யக்கூடிய ஆளுமையும் அனுபவமும் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கின்றதா என்ற கேள்வி இன்று எழுந்துள்ளது.

மாவை சேனாதிராஜாவின் மரணம் என்பது தமிழரசுக் கட்சிக்குள் ஒரு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாத்திரமல்லாமல், தமிழ் மக்களின் விடுதலையை நேசிக்கக்கூடிய அனைவரும் ஒன்றுபடுவதையும் வலியுறுத்தி நிற்கின்றது.

இன்றிருக்கின்ற தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஐக்கியப்பட்டு தமிழ் மக்கின் உரிமைக்காக

ஒன்றுபட்டு செயற்படுவதே மாவை சேனாதிராஜாவுக்குச் செய்யக்கூடிய ஆத்மார்த்தமான அஞ்சலியாக இருக்கும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாற்றம் தொடரட்டும்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் அரசியல்வாதிகளில் பலருக்கும் மிக நல்ல படிப்பினைகளை வழங்கியிருக்கின்றது என்பதை நேற்று யாழ். மாவட்டச் செயலகத்தில் நடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் சான்று பகர்ந்தது. அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 3 பேர் ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள். ஒருவர் எப்போது எந்தப் பக்கம் இருப்பார் என்பதே தெரியாது. இருவர் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள். எல்லோருமே தமிழர்கள்தான். இந்த நிலையில் எதிர்க் கட்சியைத் சேர்ந்தவர்களான இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் அரசியல் பேசாது, மக்களின் தேவைகளை முன்னிறுத்தி உரையாடியதைக் காண முடிந்தது. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்ஒருஅரசியல்மேடையாகாமல்மக்களின்தேவைகளை முன்வைக்கும் ஒரு இடமாக மாறியிருந்தமை அந்தக் கூட்டத்தைக் கூட்டியதன் நோக்கத்திற்கு வலுச் சேர்ப்பதாக அமைந்திருந்தது.

இதற்கு முன்னர் நடந்திருக்கும் பெரும்பாலான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் அபிவிருத்தி விடயங்கள், மக்கள் பிரச்சினைகள் குறித்துப் பேசப்பட்டாலும் அவற்றையெல்லாம்விட அரசியல் சண்டை, சச்சரவுகளே நிறைந்திருக்கும். பல சமயங்களில் இது என்ன அரசியல் மேடையா என்று ஆதங்கப்படுமளவிற்கு அரசியல் அனல் பறக்கும். கடைசியில் உருப்படியான முடிவுகளோ ஆலோசனைகளோ இன்றி கூட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்படும். இம்முறை அத்தகைய நிலை இல்லாதது கவனிக்கத்தக்கதாக இருந்தது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தமது கோரிக்கைகளாக எதிர்த் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்தனர். வைத்தியசாலைகளின் வசதி வாய்ப்பை அதிகரிக்க வேண்டியது குறித்தும், மாகாண சபையில் காணப்படும் ஆசிரியர்வெற்றிடங்களைநிரப்பவேண்டியதேவைகுறித்தும், வெள்ளம் பாதித்த மக்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்தும் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்தது, அரசியல் கோசங்களுக்குள் மறைந்துகொள்ளாமல் அவற்றை முன்னிறுத்தியது சிறப்பானது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் கடந்த தேர்தலில் தமது கட்சிகளைத் தாண்டி தேசியக் கட்சி ஒன்றுக்கு வாக்களித்ததன் அடிப்படையை அவர்கள் புரிந்துகொண்டிருப்பதற்கான அறிகுறியாக இதனைக் கொள்ளலாம். இந்த மாற்றம் இன்னும் விவேகமாகவும் வினைத்திறனோடும் பரவினால் தமிழ் மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். ஒருவேளை, சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினரான அருச்சுனா மருத்துவத்துறையில் கைவைத்ததால்தான் அவரால் நாடாளுமன்ற உறுப்பினராகிவிட முடிந்தது என்று கருதி, அதற்கு முன்னதாகத் தாமும் அந்த விடயங்களில் குரல் கொடுப்பதாகக் காட்டுவதற்காக அவர்கள் அப்படிச் செய்திருந்தால் தமிழர்களின் சாபக்கேட்டை மாற்ற முடியாது.

எப்படியிருந்தாலும்மக்களின்குரலைப்புரிந்துகொள்வதற்கு நாடாளுமன்றஉறுப்பினர்கள்முயற்சிக்கிறார்கள்என்கிறசெய்தி மகிழ்ச்சியளிப்பது. மக்களுக்கு அரசியல் கோரிக்கைகளும் விடுதலையும் எந்தளவிற்கு முக்கியமோ அதேயளவிற்கு அவர்களது அன்றாடப் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வும்கூட முக்கியம் என்பதை தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளும்போதுதான் அவர்கள் மக்களால் அதிகம் நேசிக்கப்படுவார்கள் என்பதே உண்மை. எனவே இந்த நல்ல மாற்றம் தொடரட்டும்.

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறித்துச் சிந்தித்து செயற்படவேண்டும்

## ஆளும்தரப்புக்கு ஐதேக தவிசாளர் அழுத்தம்

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும்போது ஆளும்மதரப்பு மிகவும் அவதானமாக சிந்தித்து செயற்பட வேண்டும். வரலாறு பூராகவும் இருந்த அரச தலைவர்களில் அதிகமானவர்கள் அகாலமாக இறந்துள்ளனர். அதனாலே பிரபுக்கள் பாதுகாப்பை, பாதுகாப்பு அமைச்சுக்கு அரசமைப்பின் ஊடக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

அவர், காலி மாவட்டத்தில் கரந்தெனிய தொகுதியில் வியாழக்கிழமை இடம்பெற்ற அரசியல் சபை கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் பிரபுக்களின் பாதுகாப்பு தொடர்பில் பலரும் கதைத்து வருகின்றனர். ஆளும்தரப்பு அவர்களின் பாதுகாப்பைக் குறைத்து வருவது தொடர்பாகவும் பலரும் கதைத்து வருகின்றனர்.

இவ்வாறான தீர்மானங்களை எடுக்கும் போது ஆளும்தரப்பு மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். குறிப்பாக மஹிந்த ராபக்சஇந்தநாட்டில்30வருடங்களக இருந்து வந்த பங்கரவாதப் போரை முடிவுக்க்கு கொண்டுவர இறுதியாக தலைமைத்துவம் வங்கிய ஒருவர்.

மஹிந்த ராஜபக்சவுக்கு தனிமையில் யாழ்ப்பாணத்துக்கு சென்றுவர முடியுமா? இந்தியாவின் புத்தகயாவுக்கு சென்றுவர முடியுமா?. அவரை வெறுக்கக்கூடிய நபர்கள் இன்னும் இருக்கலாம். அவரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கலாம். அதனால் இவ்வாறானதீர்மானங்களைஎடுக்கும்போது ஆளும்தரப்புஇதனைவிடபுத்திசாதுரியமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

எமது நாட்டின் அரச தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என நூற்றுக்கும் அதிகமானவர்கள் அகாலமாக உயிரிழந்துள்ளனர்.சந்திரிக்காபண்டாரநாயக்க, மஹிந்த ராஜாபக்ச, கோத்தாபய ராஜபக்ச போன்றவர்கள் நூழிலையில் உயிர் தப்பி இருக்கி0ன்றனர்.ஜே.ஆர். ஜயவர்த்தனவை நாடாளுமன்றத்தில் குண்டு வீசிக் கொல்ல முயற்சித்தனர்.

2001ஆம் ஆண்டு நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது வீடமைப்பு அமைச்சராக நானே இருந்தேன். அதற்கு முந்திய ஆளும்தரப்பில் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வீடுகளை மீள ஒப்படைக்குமாறு நான் அறிவித்திருந்தேன். அபோது லக்ஷ்மன் கதிர்காமரின் வீட்டையும் மீள ஒப்படைக்குமாறு தெரிவித்திருந்தேன். இதன்போது அன்று பிரதமராக இருந்த ரணில் விக்ரமசுங்க, கதிர்காமருக்கு வழங்கப்பட்டிருந்த வீட்டை தொடர்ந்து அவருக்கு வழங்குமாறு தெரிவித்தார்.

அப்போது அவர் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவே இருந்தார். அது மாத்திரமல்லாது, அவரின் பாதுகாப்புக்கு 140 பாதுகாவலர்கள் மற்றும் குண்டு துளைக்காத வாகனம் ஒன்றையும் ரணில் விக்ரமசிங்க வழங்கியிருந்தார். ஆனால் 2004ஆம் ஆண்டு எமக்கு ஆட்சி அதிகாரம் இல்லாமல்போனது. அந்த காலப்பகுதியில் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டார். இதுதான் வரலாறு.

அதனால் அதிகாரத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் ஆளும்தரப்பு அவதானமாகச் செயற்பட வேண்டும். ஆளும்தரப்பு மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் அவதானமாகச் செயற்படவேண்டும். மஹிந்த ராஜபக்சநாட்டு மக்கள் அனைவரும் எங்குவேண்டுமானாலும் பாதுகாப்பாக சென்றுவர வழி ஏற்படுத்திக்கொடுத்த ஒரு தலைவர்.

அதனால் ஒருசில விடயங்கள் தொடர்பில் ஆளும்தரப்பு மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். எமது தலைவர்கள் எமது நிலைப்பாட்டுக்கு இனங்கினாலும் இல்லாவிட்டாலும் அவர்களைப் பாதுகாப்பதற்கு ஆளும்தரப்புக் கட்டுப்பட்டுள்ளது. அதனாலே பிரபுக்களின் பாதுகாப்பை, பாதுகாப்பு அமைச்சுக்கு அரசமைப்பின் ஊடக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# தொழில் துறையினருக்கான கலந்துரையாடல் திருமலையில்

(ஹஸ்பர்)

கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி அவர்களின் தலைமையில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார அவர்களின் ஏற்பாட்டில் பிராந்திய கைத்தொழில் சேவை நிலையத்தின் பிராந்திய பணிப்பாளர் ( கிழக்கு மாகாணம்) கே. தயாபாரன் அவர்களின் ஒருங்கிணைப்பில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழில் துறையினருக்கான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொழில்துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பை அதிகரிப்பது கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். அந்த வகையில் கைத்தொழில் துறையில் உள்ள முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காணும் நோக்கில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழில் துறையினர் எதிர்கொள்ளும் தடைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன. தொழில் துறையினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குதக்க பதிலும் இதன்போது வழங்கப்பட்டன.

இதன்போதுமாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரா, நாடாளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரியசஞ்சன, கைத்தொழில் அபிவிருத்திக்குரிய மேலதிக செயலாளர் மற்றும் பணிப்பாளர் உட்பட தொழில் துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.

# சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் பரிசோதனையின்றி துறைமுகத்தில் விடுவிப்பு

## சுங்க தொழிலாளர் சங்க கூட்டணி தெரிவிப்பு

முழுமையாக பரிசோதிக்கப்பட வேண்டும் என்று சிவப்பு முத்திரை பதிக்கப்பட்ட கொள்கலன்கள் எவ்விதமானபரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளன. இதனால் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டு அந்த குற்றச்சாட்டு எம் மீது சுமத்துப்பட்டால் அதன் பொறுப்பை எம்மால் ஏற்க முடியாது. குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான நிறுவனங்கள் மற்றும் நபர்களே இந்தக் கொள்கலன்களை இறக்குமதி செய்துள்ளனர் என சுங்க தொழிற்சங்க சங்க கூட்டணியின் தலைவர் அமல் சஞ்ஜீவ தெரிவித்தார்.

அவர், கொழும்பில் உள்ள சுங்கத் திணைக்கள தொழிற்சங்க கூட்டணி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுங்கத்தில் கொள்கலன்களைப் பரிசோதனை செய்யும் முறைமையில் கணினிதரவுகட்டமைப்பின்ஊடாகதெரிவு செய்யப்படும் 35 சதவீதமளவிலான கொள்கலன்கள் மாத்திரமே பரிசோதனைக்கு உட்படுத்துப்படுகிறது.

மிகுதி 65 சதவீதமளவிலான கொள்கலன்கள் பரிசோதிக்கப்படாமல் விடுவிக்கப்படுகின்றன. பரிசோதனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 300 இற்கும் அதிகமான கொள்கலன்கள் எவ்விதமானபரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளமை பிரச்சினைக்குரியதாகும்.

இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில்பெரும்பாலானவைஅதி அவதானத்துக்குரியதாகக் கருதப்பட்டு பரிசோதனைசெய்யப்படவேண்டும்என்று சிவப்பு முத்திரை பதிக்கப்பட்டதாகும். சுங்கத்தின்உள்ளகபரிசோதனை அலகுக்கு இவ்விடயம் தொடர்பான அனைத்து தரவு கட்டமைப்பின் தகவல்களையும் வழங்கியுள்ளோம்.

முறையான விசாரணைகள் முன்னெடுக் கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம். சுங்கத் திணைக்களத்தால் ஏனைய தரப்புக்கும் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. முழுமையாகபரிசோதிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்ட நிலையில் இருந்த கொள்கலன்கள் எவ்விதமான பரிசோதனைகளுமில்லாமல் விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஏதேனும் பாதிப்பு சமூக கட்டமைப்பில் ஏற்பட்டு அந்த குற்றச்சாட்டு எம்மீது சுமத்துப்பட்டால் அதன் பொறுப்பை எம்மால் ஏற்க முடியாது. ஆகவே இந்த சம்பவம் தொடர்பில்முறையானவிசாரணைகளை மேற்கொள்வதாக ஆளும்தரப்புக் குறிப்பிட்டுள்ளது.

ஒரு தனிபநருக்கு 300 இற்கும் அதிகமான கொள்கலன்களை இறக்குமதி செய்ய முடியாது. பரிசோதனைகள் ஏதுமில்லாமல் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில்பெரும்பாலானவைபல குற்றச்சாட்டுக்களுடன்தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமானவை. சுங்கத்தில் அவதானத்துக்குரிய பட்டியலில் குறித்த நிறுவனம் மற்றும் நபர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றார்.

# எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு சதவீதம் உயர்ந்துள்ளது

இலங்கையில் எடை குறைந்த குழந்தைகளின் பிறப்பு வீதம் உயர்ந்துள்ளது. அத்துடன்வருடாந்தம் பிறந்து ஒரு வயதை அடைவதற்கு முன்னரே சுமார் 2,500 குழந்தைகள் உயிரிழப்பதாக சமூக வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் சமூக வைத்திய நிபுணர் கபில ஜயரத்தன தெரிவித்தார்.

அவர் வியாழக்கிழமை இலங்கை மருத்துவ சங்கத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தரவுகளின்படி வருடாந்தம் 3 இலட்சத்து 13 ஆயிரம் தாய்மார்கள் கர்ப்பம் தரிக்கிறார்கள், 2 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும் அவ்வாறு பிறக்கும் அனைத்துக் குழந்தைகளும் நல்ல தேகாரோக்கியத்துடன் பிறப்பதில்லை.

ஆண்டு தோரும் 5 வயதுக்கும் குறைந்த 3,300 குழந்தைகள் உயிரிழக்கின்றனர். கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

நாட்டில் கர்ப்பம் தரிக்கும் தாய்மார்களில் சுமார் 26 ஆயிரம் பேருக்குகர்ப்பகாலத்தின்ஆரம்பப்பகுதியில் கரு கலைவதும் அவதானிக் கப்பட்டுள்ளது. அதாவது கர்ப்பம் தரித்ததிலிருந்து 3 தொடக்கம் 4 மாதங்களுக்குள் பல்வேறு காரணங்களால் தாய்மார்களுக்கு கரு கலைவதாக தெரியவந்துள்ளது.

பொருளாதாரசுமை, கருத்தரித்தல் தொடர்பில் போதியளவான தெளிவின்மை, வாழ்க்கை சூழல் போன்றன இதற்கு காரணமாக உள்ளன. மேலும் இந்நாட்டின் சுகாதார சேவையின் தரம் வீழ்ச்சி கண்டிருப்பதும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளது. இலங்கையர்களின் சராசரி ஆயுட்காலம் அதிகரித்துள்ளது.

அதாவது ஆண்களின் வயதெல்லை 73 ஆகவும் பெண்களின் வயதெல்லை 80 ஆகவும் உயர்வடைந்துள்ளது. நோய் நிலைமைக்கு ஆளாகியதன் பின்னர் சிகிச்சைகளைப் பெறுவதைவிட நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வது அவசியம்.

இலங்கையர் என்ற ரீதியில் நாம் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும். நாட்டில் உள்ள 30 சதவீதமான சிறுவர்கள் அதிக உடல் பருமனால் பாதிப்புக் குள்ளாகின்றனர், குறிப்பிட்ட ஒரு பகுதியினர் போஷாக்குஇன்மையால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த வருடம் 18 வயதுக்கும் குறைந்த சிறுவர்கள் பலர் தற்கொலை செய்துக் கொண்டுள்ளனர். மித மிஞ்சிய சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட இணையத்தளப் பாவனையே இதற்குக் காரணமாக உள்ளது. உலகில் பல நாடுகள் சிறுவர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு சமூக வலைத்தள பாவனைக்குத் தடைவிதித்துள்ளன.

ஆகையால் இவ்வாறான தடைச் சட்டங்களை இந்நாட்டிலும் கொண்டு வருவதற்காக வைத்திய துறையினர் முயற்சித்து வருகின்றனர். மேலும் ஊனக் குறைபாட்டுடன்கூடிய கருக்கலைப் புக்கு இந்தியா போன்ற நாடுகள் அனுமதி வழங்கியுள்ளன. எனினும் இலங்கையில் அச்சட்டத்தை கொண்டு வருவதற்காக சுமார் 20 வருடங்களாக போராடி வருகின்ற போதிலும், இதுவரை சாத்தியப்படவில்லை என்றார்.



# தரம் 2 மாணவன் வைத்தியசாலையில தாக்கினார் என அதிபர் மீது குற்றச்சாட்டு

(சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில்தரம்இரண்டில்கல்வி பயிலும் மாணவன் புதன்கிழமை பாடசாலைக்கு தாமதமாக வந்தார் என்ற காரணத்தை மையமாக வைத்து அதிபர் குறித்த மாணவனின் வகுப்பறைக்கு சென்று தடியினால் அடித்தார் எனவும் இதன் காரணமாக அந்த மாணவன் இரவு முழுவதும் சிரமப்பட்டார் எனவும் அத்தோடு வியாழக்கிழமை பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



இது விடயமாக மாணவனின் பெற்றோர்வியாழக்கிழமைகற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின்அதிபருக்குஎதிராகமுறைப்பாடு செய்துள்ளதுடன் குறித்த மாணவன் சிகிச்சைக்காக கற்பிட்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 10 நிமிட தாமதத்தால் ஒருநாள் கல்வியை இழக்கும் அல் அக்ஸா தேசியப் பாடசாலை மாணவர்கள்

## அதிருப்த்தியில் பெற்றோர்

(சியாஜ்)

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் கடந்த ஐந்து மாத காலமாக பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாணவர்கள் ஐந்து பத்து நிமிடங்கள் தாமதமாகும் சந்தர்ப்பங்களில் பாடசாலை கதவுகளை மூடி மாணவர்கள் வீடுகளுக்கு திருப்பி அனுப்பும் செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு பாடசாலை ஆரம்பமாகும் காலை நேரங்களில் பாடசாலை பிரதான வாயிலில் சிலர் நின்று கொள்வதாகவும் தாமதமாக வரும் மாணவர்களின் பெற்றோர்களுடன் முரண்படுவதுடன் தகாத வார்த்தை பிரயோகங்களையும் பயன்படுத்துவதுடன் தாமதமாக வரும் தரம் இரண்டு மற்றும் தரம் மூன்று மாணவர்களை அதிபர் அடித்து பயம் முறுத்தும் செயற்பாட்டை மேற் கொண்டு வருகின்றார்.

இவ்வாறான செயற்பாடுகளை அடுத்து பெற்றோர்களால் முறைப்பாடு ஒன்றும் கற்பிட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இது விடயம் குறித்து உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்டு தாமதமாகும் மாணவர்களின் கல்வி பாதிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அதிபரின் செயற்பாடுகளை நிறுத்துமாறும் ஆரம்ப பிரிவு மாணவர்களை அடித்து தண்டிக்கும் செயற்பாட்டிற்கும் மற்றும் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்தில் பாடசாலையின் பிரதான வாயிலில் நின்று கொண்டு மாணவர்களை அழைத்து வரும் பெற்றோர்களுடன் முரண்பட்டு பிரச்சினைகளை உருவாக்கும் மேற்படி குழுவை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளதுடன் இவ்வாறு அதிபரின் தண்டனை காரணமாக பாதிக்கப்பட்ட தரம் இரண்டு மாணவி ஒருவர் வியாழக்கிழமை அதிபருக்கு எதிராக கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட மாணவி கற்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்மையும் குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலையில் மாற்றுத்திறனாளிகளுக்கான வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி வியாழக்கிழமை திருகோணமலை இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும் சமூக சேவைகள் திணைக்களம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இதன் போது குண்டு எறிதல், சக்கர நாற்காலி ஓட்டம், ஈட்டி எறிதல், பரிதி வட்டம் எறிதல் என பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகள்இடம்பெற்றிருந்தன.

இதில் முதலாமிடம் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் மார்ச் மாதம் கொழும்பில் இடம் பெறவுள்ள தேசியமட்ட மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழாவுக்கு அழைத்துச் செல்லவுள்ளதாக மத்திய அரசாங்கத்தின் சமூக சேவைகள்திணைக்களமாவட்ட இணைப்பாளர் த.பிரணவன் தெரிவித்தார்.

இந்நிகழ்வைதிருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் ஆரம்பித்து வைத்துடன் குறித்த போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.








# போதைப்பொருளுடன் வயோதிப பெண் கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் போதைப்பொருளுடன் வயோதிப பெண் ஒருவரை கைது செய்துள்ளார் என பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரினால் செட்டிகுளம் பகுதியில் வைத்து

51 வயதுடைய வயோதிப பெண் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இவரிடம் இருந்து 1740 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 2380 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணையை பூவரசங்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின் குறித்த பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பூவரசங்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். 100

# போதையில் வர்த்தக நிலையத்தில் அட்டகாசம் புரிந்த மதகுரு கைது

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, புகையிரத வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் மது போதையில் அட்டகாசம் செய்த இந்து மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் மது போதையில் வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் சென்ற இந்து மதகுரு ஒருவர் அப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றின் கொத்து ரொட்டி போடும் கூட்டு கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியதுடன், அருகில் இருந்த தொலைகாட்சி திருத்துமிடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பழைய தொலைக் காட்சி பெட்டிகளையும் சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் வீதியில் சென்றோர் குறித்த மதகுருவை மடக்கிப்பிடித்து வைத்திருந்ததுடன் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்த இந்து மதகுவை கைது செய்ததுடன், வவுனியா பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். 100

காலைக்கதிர் Kalaikkathir

## பொலிஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பதில்லை எனக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

அதற்குப் பதிலளித்துக் கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தாவது:

நான் இராமநாதபுரம், ஈச்சங்குளம் ஆகிய பகுதிகளுக்கு மக்கள் சந்திப்புக்கு சென்றபோது பொலிஸாரின் விரும்பத்தகாத செயற்பாடுகளால் குறித்து அப்பகுதி மக்கள் என்னிடம்தெரிவித்தனர். அவர்கள்பொலிஸார் மீது நம்பிக்கை இழந்து விரக்தி நிலையில் உள்ளனர்.

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தால், உடனேயே சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு அந்தத் தகவல் செல்கின்றன. தமது பகுதியில் பொலிஸ் நிலையம் இருந்தும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்றால் எதற்காக பொலிஸ் நிலையம்? அதனை மூடிவிடுங்கள் என என்னிடம் தெரிவித்தனர்.

அதற்கு பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் பதில் அளிக்கையில், கீழ்நிலை பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நம்பிக்கையீனம் இருந்தால், மேலதிகாரிகளுக்கு தகவல் வழங்க முடியும் என்றார்.

அப்போது குறுக்கிட்ட ஜனாதிபதி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான உற்பத்தி நிலையம் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தால் அந்த தகவல் வழங்கியவர் தொடர்பில் சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுவதாக எனக்கும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார், சிறீதரன், ஸ்ரீபவானந்தராஜா, றஜீவன், இளங்குமரன், அருச்சுனா, திணைக்களத் தலைவர்கள், பணிப்பாளர்கள், பதவி நிலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஐதேக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று ஆசிர்வாதம் பெற்ற சந்தர்ப்பத்திலேயே மகாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னரும் இரு கட்சிகளின் இணைப்பு குறித்து பேசப்பட்டபோதும் அவை வெற்றியளிப்பதாக தெரியவில்லை என்றும் மல்வத்த பீடாதிபதி கூறினார்.

## இனவாதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

யாழ். வல்வெட்டித்துறையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

வடக்கு மக்கள் கடந்த இரண்டு பிரதான தேர்தல்களின்போதும் தேசிய மக்கள் சக்திக்கு அளித்த வாக்குகள் வெறுமனே ஒரு ஆளும்தரப்பை அமைப்பதற்கான புள்ளடி மாத்திரம் அல்ல. மாறாக அவை இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைவதற்கு வழங்கிய வாக்குகளாகும்.

இலங்கையில் முதல் தடவையாக வடக்கு, கிழக்கு தெற்கு, மேற்கு, மலையகம் என பேதமின்றி அனைத்து மக்களின் ஆதரவுடன் ஆளும்தரப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டில் பல தசாப்தங்களாக ஆட்சியாளர்கள் மக்களை வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என பிளவுபடுத்தியே ஆட்சி செய்தார்கள். ஆனால், நாம் மக்களை பிளவுபடுத்தும் அரசியலுக்கு பதிலாக அவர்களை ஒன்றிணைக்கும் ஆளும்தரப்பை உருவாக்கியுள்ளோம்.

இதற்கு முன்னர் நாட்டில் மேல் மட்டத்தில் இருந்த ஒரு சில குடும்பங்களிடமே அதிகாரம் இருந்தது. ஆனால், இந்த நாட்டு மக்கள் ஜனாதிபதி தேர்தலின்போது தீர்க்கமான முடிவை எடுத்திருந்தனர். உயர் மட்டத்தில் இருந்து சாதாரண மக்களிடத்தில் அதிகாரத்தை கைம்மாற்றினார்கள். எனவே, இந்த மக்களுடனேயே எமக்கு பிணைப்பு உள்ளது. கட்டம் கட்டமாக இந்த நாட்டை நாம் மீட்டெடுப்போம்.

அஸ்வெசும கொடுப்பனவை அதிகரித்துள்ளோம். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்கியுள்ளோம். நாடளாவிய ரீதியில் அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானித்துள்ளோம். இந்த வருடத்துக்குள் அதற்கான நடவடிக்கை எடுப்போம்.

வடக்கின் காங்கேசன்துறை, பரந்தன், மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் புதிய கைத்தொழிற்பேட்டைகளை நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்த இலங்கையர்களுக்கு இங்கு முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கிறோம். தொழில்வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு இங்கு தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.

அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். பொலிஸ் திணைக்களங்களில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை உள்ளது. 2 ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளோம். தமிழ் பேசும் இளைஞர்களும் இதில் இணைந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறோம். இந்த பகுதிகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. அதனை கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

அதேபோன்று காணிப்பிரச்சினை உள்ளது. மக்களின் காணிகள் மக்களிடத்திலேயே வழங்கப்பட வேண்டும். எனவே, காணிப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுப்போம். கிராமப்புறங்களில் உள்ள வீதிகளைப் புனரமைக்க நிதி ஒதுக்குவோம். குடிநீர் வசதிகளைப் பெற்றுக்கொடுப்போம்.

எமது மீனவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இந்த பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். மீனவர் பிரச்சினை தொடர்பில் நாம் இந்திய ஆளும்தரப்புடன் கலந்துரையாடினோம். இலங்கை கடற்படைக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பணிப்புரை விடுத்துள்ளோம். கட்டம் கட்டமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம். எனவே, எமக்கு சிறிது காலம் தாருங்கள். நிச்சயம் தீர்வு காண்போம். சுற்றுலாத்துறையை ஊக்குவிப்போம். வடக்கில் தெங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

நாம் ஒன்றிணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்புவோம். கடந்த காலங்களில் இனவாத்தைப் பயன்படுத்தி அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வந்தார்கள். நாட்டில் மீண்டும் இனவாதம், மதவாதம் தோன்ற ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். இனவாத்தை கையில் எடுக்கும் தரப்பினருக்கு எதிராக கடுமையான சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

இனிமேலும் முரண்பட்டுக்கொண்டு நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாது. இனங்களுக்கு இடையில் தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்படவேண்டும். அதற்கு எமது ஆளும்தரப்பு முழுமூச்சாகச் செயற்படுகிறது. மக்களிடத்தில் இனவாதம், மதவாதம் இல்லை. ஆனால் அரசியல்வாதிகளிடம் இந்தப் பண்புகள் உள்ளன. தற்போது தெற்கில் இனவாத்தை தோற்றுவிக்க ஒருதரப்பினர் முயற்சிக்கின்றனர்.

இந்த நாட்டை புதிய யுகத்தை நோக்கி அழைத்துச் செல்வோம். இந்த மக்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கையை ஒருபோதும் சிதைக்க மாட்டோம். கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வோம். தண்டனை பெற்றுக் கொடுப்போம்.

கடந்த தேர்தலின்போது பிரிந்து செயற்பட்டவர்கள் மீண்டும் ஒன்றிணைய முயற்சிக்கிறார்கள். நேற்றுமுன்தினம் இரவு ஒன்றாகக் கூடியுள்ளனர். ஒருபக்கம் மத்திய வங்கியை கொள்ளை அடித்தவர். மற்றைய பக்கம் ஆஸ்திரேலிய பிரஜை ஒருவரை ஏமாற்றியவர். திருடர்கள் ஒன்றிணைந்தாலும் மக்கள் ஒற்றுமையாக இருக்கும் வரையில் அவர்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாது. நாம் முன்னெடுத்துள்ள விசாரணைகளை அவர்களால் நிறுத்த முடியாது. மேல் மட்டத்தில் உள்ளவர்கள் இணைந்தாலும் மக்கள் எம்முடன் இருக்கிறார்கள். நிச்சயம் குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக்கொடுப்போம் என்றார்.

# சுப்பர் டீசல் விலை நள்ளிரவு அதிகரிப்பு

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சுப்பர் டீசல் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, 313 ரூபாவாக இருந்த சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 18 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 331 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், ஏனைய எரிபொருட்களின் விலைகளில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, மாதாந்த எரிபொருள் திருத்தத்திற்கு அமைய, பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்த எரிபொருள் விலைகளுக்கு ஏற்ப சினோபெக் எரிபொருள் விலையும் திருத்தப்பட்டுள்ளன.

அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் சினோபெக் நிறுவனம் விற்பனை செய்யும் சுப்பர் டீசலின் விலையை 18 ரூபாவால் அதிகரிக்க தீர்மானித்துள்ளது. அதன்படி, 313 ரூபாவாக இருந்த சுப்பர் டீசலின் விலையை 331 ரூபாவாக உயர்த்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.



# இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கண்காணிப்புக் கேமராக்கள் கையேற்கும் நிகழ்வு

(நூருல் ஹுதா உமர்)

நவீன உலகத் தேவைகளுக்கு ஏற்றவாறு நாமும் மாறிச் செல்வோம்' என்பதற்கிணங்க கல்முனை கல்வி வலய கல்முனை கமு/கமு/ இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கண்காணிப்புக் கேமராக்கள் அண்மையில் பொருத்தப்பட்டன. அதன் உத்தியோகபூர்வ கையேற்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம்.றிசாத் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் அவர்களின் வேண்டுகோளுக்கமைவாகவும், பாடசாலை அபிவிருத்திச்செயற்குழுவின் செயலாளர் அவர்களின் தொடர் முயற்சியின் பயனாலும் 'யங் மௌண்ட்' விளையாட்டுக் கழகத்தின் ஸ்தாபகர் ஏ.எம். அப்துல் ரஹ்மான் அவர்களின் நிதி உதவியின் மூலம் இக் கண்காணிப்புக் கேமராக்கள் பொருத்தப்பட்டு பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக, கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.ஜாபிர், அவர்களும், விசேட அதிதியாக 'யங் மௌண்ட்' விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ஏ.எம்.றியால் அவர்களும் கலந்து கொண்டு, கண்காணிப்பு கேமராக்களை உத்தியோகபூர்வமாக கையளித்ததுடன் அதற்கான நினைவுக் கல்வெட்டையும் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இதன் போது 2024 ஆம் கல்வி ஆண்டின் இறுதித் தவணை பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான தேர்ச்சி முன்னேற்ற அறிக்கையும் அதற்கான சான்றிதழ்களும் அதிதிகளால் வழங்கிவைக்கப்பட்டது. மேலும் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளும் முன்வைக்கப்பட்டதுடன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஐ.ஜாபிர், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்று குழு உறுப்பினர் ஏ.அபூபக்கர் அவர்களுக்கும் அதிபர் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.









# சம்மாந்துறை வலயமட்ட வித்தியாரம்ப விழா

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் ஆரம்பக் கல்வியினை கற்க வருகின்ற மாணவர்களை வரவேற்கின்ற வித்தியாரம்ப விழா பல்வேறு பாடசாலைகளில் இடம்பெற்றன.

இதில் வலயமட்ட விழா வியாழக்கிழமை சம்மாந்துறை தாறுல் உலூம் வித்யாலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக்கல்வி பணிப்பாளரும் மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக உத்தியோத்தர்கள் என பலர் இங்கு வருகைதந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் தலைமை சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலய முதல்வர் எம் ஐ எம் கலில் அதிபர் அவர்களுடைய தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மாணவர்களை வரவேற்கும் முகமாக பல்வேறு கலை, நாட்டார் பாடல் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றரத குறிப்பிடத்தக்கது.









# மறைந்த தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அஞ்சலி

## நூல் வெளியீட்டு நிகழ்வில் மௌனம் அனுஷ்டிப்பு

மறைந்த தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவராக, எங்களோடு சக நாடாளுமன்ற உறுப்பினராக நீண்ட காலம் பணியாற்றிய நண்பர் மாவை சேனாதிராஜாவுக்குஎன்னுடையஅஞ்சலியை செலுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாறு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ,வியாழக்கிழமை கொழும்பு-7, இலங்கை மன்றக் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம்மீடியாபோரம்ஏற்பாடுசெய்திருந்த 'உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் - மறைகரம் வெளிப்பட்டபோது'மற்றும்'நாங்கள்வேறான வர்கள் அல்ல மண்ணின் வேரானவர்கள் - முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல்' ஆகிய இரு மொழிபெயர்ப்பு நூல்களின் வெளியீட்டு நிகழ்வின் ஏற்பு உரையின் ஆரம்பத்தில் , மறைந்த தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான மாவை சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்துவதாகக் குறிப்பிட்டார்.

பிரஸ்தாப நிகழ்வின் தொடக்கத்திலேயே இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த அனைவரும் எழுந்து நின்று, அன்னாருக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலியும் செலுத்தினர்.

அவர் ,மறைந்த சேனாதிராஜாவைப்பற்றி மேலும் கூறியதாவது -

மாவை என்கின்ற பெயர் தமிழரசு கட்சியின் பல சாத்வீக போராட்டங்களில் ஓர் இளைஞரணித் தலைவராக தந்தை செல்வா, அண்ணன் அமிர்தலிங்கம், அண்ணன் சிவா, அண்ணன் சம்பந்தன் என்று தலைமைத்துவங்கள் மாறி மாறி வந்தபோதிலும்கூட தமிழரசு கட்சியின் வீரியமிக்க ஓர் இளைஞராக இருந்து முதுமை அடைந்த காலத்திலும் கூட, அதே வீரியத்துடன் தமிழினத்திற்காக பேசிய, தொடர்ந்தும் தன்னுடைய முழு வாழ்க்கையும் அதற்காக அர்பணித்த, கொழும்பு,புளர்ஸ் வீதி படுகொலைகளின் போது தெய்வாதீனமாக உயிர்துப்பிய ,பல காலம் சிறைவாசம் அனுபவித்த ஒரு நல்ல அர்பணிப்புமிக்க தலைவரை நாங்கள் இழந்திருக்கிறோம்.

அவருக்கான அஞ்சலியை நான் இந்த மேடையில் செய்கின்றதன் காரணம் துரதிர்ஷ்டவசமாக அவருடைய இறுதி கிரியை நடக்கின்ற ஞாயிற்றுக்கிழமை நான் இலங்கையில்இருக்கமாட்டேன்,இருப்பினும் நாளை அவருடைய புகழுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ்ப்பாணம் போகலாம் என்றிருக்கிறேன். இருப்பினும் இந்த ஒருசில வார்த்தைகளை அன்னாருக்கு அர்ப்பணிக்கிறேன். - என்றார்.

# ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் 2 நூல்கள் வெளியீட்டு விழா

ஸ்ரீலங்காமீடியாபோரத்தின்ஏற்பாட்டில் கொழும்பு-7 ,இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை இடம் பெற்ற அதன் தலைவர் என்னும் என்எம்.அமீன் மொழிபெயர்த்த பேராசிரியர் ராஜன் ஹூல் எழுதிய 'உயிர்த்த ஞாயிறு அனர்த்தம்- மறைகரம் வெளிப்பட்டபோது' மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் ஆங்கிலத்தில் எழுதி தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 'நாங்கள் வேறானவர்கள் அல்லர், மண்ணின் வேரானவர்கள்- முஸ்லிம்கள் மீது கட்டமைக்கப்பட்ட சந்தேகங்களை களைதல் ஆகிய நூல்களின் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள்,உலமாக்கள்,ஊடக ஆசிரியர்கள்,பல்வேறு துறைசார் பிரமுகர்கள்,சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். அதிதிகளினதும், நூலாசிரியர்களின் உரைகளும்இடம்பெற்றன





# கற்பிட்டி தில்லையூர் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்ற கால்கோள் விழா

(சியாஜ்)

கற்பிட்டி தில்லையூர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தில் தரம் ஒன்றுக்கு புதிய மாணவர்களை வரவேற்கும் காள்கோல் நிகழ்வு வியாழக்கிழமை பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.அரூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்தின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர்களான எக்ஸ் ரெஜீனா பேகம் மற்றும் எஸ்.டி.எம் சுஹைப் (நவ்ஸாத்) , பாடசாலையின் அபிவிருத்திச் சங்க செயலாளர் எம் மாஹீர், உறுப்பினர் மௌலவி றிப்கான் (றஹ்மானி) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.





# கண்பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் கிழக்கு ஆளுநரிடம் விசேட கோரிக்கை

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகரவுக்கும், கிழக்கு மாகாணத்தில் வாழும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உதயம் பார்வையற்றோர் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையே வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டதுடன் வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும்போது அவற்றைக் கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பது, அரச நியமனங்கள் வேலைகளை வழங்கும்போது மாற்றுத்திறனாளி சமூகத்திற்கு வாய்ப்புகளை வழங்குவது போன்ற விடயங்களின் அடிப்படையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

எதிர்கால ஆட்சேர்ப்புகளில், மாற்றுத்திறனாளி சமூகத்தினருக்கு வாய்ப்புகளை வழங்கவும், அபிவிருத்தி திட்டங்களில் அவர்களுக்கு வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் இதன் போது தெரிவித்தார்.







# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மாற்றம் அமைப்பால் கௌரவிப்பு

(தில்சாத் பர்வீஸ்)

மாற்றம் சம்மாந்துறை அமைப்பின் 'கல்விக்கான கரம்' வேலைத் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை அல் மனார் முஸ்லிம் வித்தியாலயத்தின் அதிபர் ஏ. சித்தி நபீறா தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

சம்மாந்துறை அல் மனார் முஸ்லிம் வித்தியாலயத்தில் முஹம்மட் அசாப் பாத்திமா லசீறா 161, சம்சார் ஆலியா மர்யம் 159, முஹம்மது லுக்மான் மலீஜத்துன் நபாஹா 146, முபாறக் முஹம்மட் றசாத் 140 ஆகிய மாணவர்கள் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் கௌரவித்து மாற்றம் சம்மாந்துறை அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்விற்கு, மாற்றம் சம்மாந்துறை அமைப்பின் ஸ்தாபக பணிப்பாளரும் தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தருமான அஸாறுடீன் சலீம், சம்மாந்துறை அல் மனார் முஸ்லிம்வித்தியாலயத்தின் வகுப்பாசிரியர் எம்.எச். நைறோஸ் என பலரும் கலந்து கொண்டனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# கிழக்கில் புலமைப் பரிசிலில் பரீட்சையில் முதலிடம் பெற்ற பற்றிமாபாடசாலை மாணவி கேசரஹர்சினிக்குப் பாராட்டு

## வலயக் கல்விப் பணிப்பாளர் நஜீம் நேரில் சென்று வாழ்த்து

(சகா தேவராஜா)

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட கல்முனை பற்றிமா கல்லூரி மாணவி கனகராசா கேசரஹர்சினியை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை பாடசாலையில் நடைபெற்றது.




கல்லூரியில் தரம் -05 புலமைப்பரீட்சையில் சித்தி பெற்ற 64 மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் அருட். சகோ. றெஜினோல்ட் தலைமையில் வெகுசிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வின் போது 180 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவி கனகராசா கேஷாரஹர்ஷினி அவர்களையும், வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற 64 மாணவர்களையும், மற்றும் 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தி பெற்ற மாணவர்களையும் காலை ஒன்றுகூடலின் போது பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு வெகு சிறப்பாக இடம்பெற்றது.

அதனைத்தொடர்ந்து 180 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவிக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனைய வலயக்கல்வி அதிகாரிகளினால் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டதோடு பாடசாலையின் அதிபர் அருட். சகோ. றெஜினோல்ட் அவர்களையும், பகுதித்தலைவர் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்திக் கௌரவித்தனர்.

சென்ற ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட சித்தி வீதத்திலும் பார்க்க இவ்ஆண்டு 1.9 சதவீதத்தினால் கூடுதலான சித்தி வீதத்தினைப் பெற்றுள்ளதோடுமாகாணத்திலும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது மிகச் சிறப்பான அம்சமாகும்.

வெளியான தரம் 5 புலமை பரீசில் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் முதலாம் நிலையியை அடைந்து சாதனை படைத்த கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரி மாணவி கனகராசா கேசராஹர்சினியை நேரில் சென்று வாழ்த்திப் பாராட்டுத் தெரிவித்த வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், மாணவிக்கு சிறப்பு பரிசினையும் வழங்கி கௌரவித்தார்.

பாடசாலைக்கு மட்டுமல்லாது கல்விவலயத்திற்கும் கல்முனைபிராந்தியத்திற்கும்கிழக்குமாகோணத்திற்கும் பெருமையையும் புகழையும் சேர்த்த மாணவியின் சாதனைக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தனது வாழ்த்துக்கள் பாராட்டுக்களுடன் வழங்கிய பரிசானது பலரையும் கவர்ந்தது.




வித்தியாசமான சிந்தனையில் மாணவியின் புகைப்படத்துடன் அவரது சாதனை வரிகளையும் பதித்து தயாரிக்கப்பட்ட அட்டைப்படத்தினைக் கொண்ட அப்பியாசக் கொப்பிகளாக வழங்கப்பட்டமை பாடசாலைச் சமூகத்தினால் வியந்து பாராட்டப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாசா, பிரதிக் கல்விப் பணிப்பாளரும் காரைதீவு கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஆ. சஞ்சீவன் மற்றும் ஆரம்ப பிரிவுக்கான ஆசிரிய ஆலோசகர்களும் கலந்துகொண்டனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2025இல் வெளியிடப்பெற்றது